**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.141/2017 |
| Prosecution Witness | : | **அ.சா.17** |
| Name | : | **அலெக்ஸ்** |
| Father's/Husband Name: | : | சைமன் |
| Address : | : | முருகன்கோவில் தெரு, தொண்டமாந்துறை, பெரம்பலூர் மாவட்டம். |
| Age | : | 72/2021 |

**தேதி: 31/08/2021**

முதல் விசாரணை : சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

நான் விவசாய வேலை செய்து வருகிறேன். தொண்டமாந்துறை வேளாண்மை கூட்டுறவு வங்கியில் எனக்கு வங்கி கணக்கு உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் இந்த ஆவணம் எனது பாஸ் புத்தகம். உறுப்பினர் எண். 1225. அது **அ.சா.ஆ.34.** எனக்கு எழுதப்படிக்க தெரியாது. ஆனால் கையொப்பமிட தெரியும். அந்த வங்கி கணக்கில் நான் பணம் செலுத்தும் போதும், எடுக்கும் போது எனக்கு வங்கியில் உள்ள கிளார்க் செலான்களை பூர்த்தி செய்து கொடுப்பார்கள். அவரின் பெயர் எனக்கு தெரியாது. அவர்கள் பூர்த்தி செய்து கொடுக்கும் விண்ணப்பத்தில் நான் கையொப்பம் இட்டு கொடுப்பேன். தற்போது என்னிடம் காட்டப்படும் 30/04/1997 ஆம் தேதியிட்ட வரிசை எண். 1225 ரூ.2000/-, 21/04/1997 ஆம் தேதியிட்ட ரூ.8000/- மற்றும் 19/07/1997 தேதியிட்ட ரூ.400/- பணம்

பெறுவதற்கான விண்ணப்ப சீட்டில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது அல்ல. ஒரு முறை வங்கியின் விசாரணை அதிகாரி என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். அந்த கையொப்பங்கள் **அ.சா.ஆ.35 மற்றும் அ.சா.ஆ.36.** இது சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை :**

அ.சா.ஆ.35 மற்றும் அ.சா.ஆ.36 உள்ள வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வங்கியில் வைத்து எழுதினார்கள். சங்கத்தில் உள்ள கிளார்க் தான் எழுதினார். அப்போது சங்கத்தில் உள்ள நபர்கள் தான் எழுதினார்கள். புதிய ஆட்கள் யாரும் இல்லை. எனக்கு இந்த சங்கத்தில் மட்டும் தான் வங்கி கணக்கு உள்ளது. எனது வங்கி கணக்கில் எவ்வளவு ரூபாய் இருப்பு இருந்தது என எனக்கு நினைவில்லை. வாக்குமூலம் பதிவு செய்த போது எனது பாஸ் புத்தகத்தை வாங்கி வைத்துக் கொண்டார்கள். வாக்குமூலத்தில் இடைசெருகல் செய்யப்பட்டதாக 4 இடங்களில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. நான் சாட்சியம் அளித்தப்படி எந்த சம்வமும் நடைபெறவில்லை என்றாலும், வங்கியினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***
Judicial Magistrate No.I,
Perambalur.

CMJudgment